# பேரிழப்புக்கள் குறித்து அரசு - இராணுவம் பெரும் முரண்பாடு!

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 19 இதழ் 149

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 03 - 7 - 1995

3-7-1995

(கொழும்பு)

மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்புகள் குறித்து அரசாங்கம் மற்றும் இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பெரும் முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

கிழக்கு மாகாணகாடுகளில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்த வேண்டு என இராணுவம் முன்னர் வலியுறுத்தியது.

ஆனால் பிரதி பாதுகாப்பு அமைச்சர்கேணல் அனுருத்த ரத்வத்த யாழ்ப்பாண நகரை கைப்பற்றும் தனது திட்டத்தை படையினர் செய்து முடிக்க ] வேண்டுமென கடும்

[5-ம் பக்கம் பார்க்க]

## பனிச்சங்கேணியில் படையினர் சூட்டிற்கு மாணவன் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பனிச்சங்கேணி இராணுவத்தினர் மேற்கொண்ட துபபாக்கிப்பிரயோகத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை படையினர் குறிப்பிட்ட பகுதியில் நடாத்திய சுற்றிவளைப்பின் போதே மாணவன் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமரசிங்கம் காளிராஜா என்பவரே படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான வராவார், க-ரி

## ★ மண்டைதீவு தோல்வியினால்

# வடபகுதி படை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய அரசு முடிவு!

(கொழும்பு)

மண்டைதீவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தகர்த்தழிக்கப்பட்டதையடுத்து வடபகுதியிலுள்ள படை அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்றும் ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் புலிகள் அரசுக்கு கொடுத்த மிகப் பெரும் அடியாக மண்டைதீவுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வடபகுதியிலுள்ள உயர் இராணுவ அதிகாரிகளின் கவலையீனத்தாலே மண்டைதீவில் படையினர் பெரும் இழப்பைச் சந்திக்க வேண்டியிருந்ததாக அரசு தரப்பில் கருதப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத்தின் மரபுகளுக்கு மாறாக மண்டை

[-6ம் பக்கம் பார்க்க]

## கரையோரப் பகுதிக்கு மேலாக பறந்த விமான

(அரியாலை)

நீண்டகால இடைவெளிக்குப்பின் யாழ். கரையோரப் பகுதிக்கு மேலாக விமானம் ஒன்று நேற்று பறந்து சென்றது.

நேற்று மாலை 4-30 மணியளவில் இவ்விமானம் பலாலி, மாதகல், காரைநகர் கடல் பகுதி ஊடாக அதி உயரத்தில் பறந்தது. 59-ரி

## எல்லைக் கிராமங்களிலுள்ள படையினர் யுத்தமுனைகளுக்கு அனுப்பப்படுவர்

(கொழும்பு)

சிங்கள எல்லைக் கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்கிய சிறிலங்கா இராணுவத்தினரை யுத்தத்திற்கு முழுமையாக பயன்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

யுத்த நடவடிக்கைக்கு ஆட்பலம் பற்றாக்குறையாக இருப்பதாக பல இராணுவ ஆலோசகர்களால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே அரசு இவ்வாறு தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

(5ம் பக்கம் பார்க்க)

## தடைசெய்யாத பொருளும் படையினரால் சோதனை!

(கொழும்பு)

யாழ். மாவட்டத்துக்கு கப்பல் மூலம் கொண்டு செல்லப்படும் தடை செய்யப்படாத பொருட்களையும் கொழும்பு துறைமுகத்தில் வைத்து படையினர் சோதனை செய்கின்றனர்.

படையினரின் இந்நடவடிக்கை குறித்து புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்தனர்

கப்பல்களில் ஏற்றப்படும் பொருட்களை படையினர் அடிக்கடி சோதனையிடுவதாகவும் அத்துடன் தடை செய்யப்படாத பொருட்களுக்கும் கூட பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறவேண்டும் என்று வலியுறுத்துவதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை வவுனியா- தாண்டிக்குளத்திலும் வடபகுதிக்கு உணவுப் பொருள் எடுத்து வரும் வாகனங்கள் மீது படையினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். -ரி

## சிங்களக் கிராமங்களின் பாதுகாப்பு ஊர்காவல் படையிடம் ஒப்படைப்பு!

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் யுத்த அச்சுறுத்தலுக்கு உட்படக் கூடிய எல்லைப்புற கிராமங்களை பாதுகாப்பதற்கு அரசு புதிய திட்டம் ஒன்று வகுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

விசேஷ பயிற்சி பெற்ற ஊர்காவற் படையினர் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை பொலனறுவை பொலிஸ் அதிகாரி மேற்கொண்டு வருகின்றாராம்.

மீகொட, பல்லியகொட முகாம்களில் பயிற்சி பெற்ற 185 ஊர்காவற் படையினரும்

(6ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரிபடகு சேவை இன்று வழமையான நேரத்துக்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அறிவித்துள்ளது. -ரி

## மீனவர்களை நோக்கி துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 4-00 மணியளவில் தொடர்ச்சியான துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இத் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து உடனடியாகக் கரை சேர்ந்தனர். இத் துப்

(5ம் பக்கம் பார்க்க)

## மன்னார்த் தீவில் உணவு நெருக்கடி அதிகாரிகள் அசமந்தப்போக்கு

(மன்னார்)

இராணுவ ஆக்கிரமிப்பினால் மன்னார் தீவில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி குறித்து அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருகின்றனர்.

கடந்த இரு வாரங்களுககு மேலாக சீரான உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.

உணவுப் பண்டங்களினதும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள்

(6-ம் பக்கம் பார்க்க)

இன்று (03-07-1995) தேர்த்திருவிழா

தமிழீழத்தின் ஈசுரவிநாயகனே வருக ! வருக !! வருகவே !!!

சோழியபுரம் பத்ம வெளியீடு

[சி-1553

## வரி விளம்பரம்

### தட்டச்சு, ரோணியோ திருத்துதல்

சகலவிதமான தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மருதம், 66, மணிக்கூட்டுவீதி, (ஆஸ்பத்திரிமுன்பாக). யாழ்ப்பாணம். (சி-1540)


# தினவரவு பதிவில் ஒப்பமிடாத டாக்டர்களுக்கு சம்பளம் இல்லை

(கொழும்பு)

தினவரவு பதிவேடுகளில் கைச்சாத்திடாத டாக்டர்களுக்கு இனிமேல் அவர்களின் சம்பளம் வழங்கப்படமாட்டாதென்று சுகாதார அமைச்சர் எ. எச். எம். பௌசி அறிவித்துள்ளார்.

உயர்மட்டத்திலிருந்து ஒழுக்கம் பேணப்படவேண்டுமெனவும் இந்த விடயத்தில் தான்கடுமையாக இருப்பதாகவும் தங்களுடைய தினவரவை தினவரவுபதிவேடுகளில் கைச்சாத்திடுவதில் டாக்டர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருப்பதாகத் தமக்குத்தெரியவில்லையென்றும் அமைச்சர் பௌசி கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக ஜூன் மாதம் 19ந் திகதியிலிருந்து சகல வைத்திய நிபுணர்களும், டாக்டர்களும் தினவரவுப்பதிவேடுகளில் கைச்சாத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் சுற்றறிக்கையொன்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ரெ ஜி பெரேரா பிறப்பித்துள்ளார்.

ஆனால் அமைச்சரின் இப்பணிப்புரையை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நிராகரித்துள்ளது. டாக்டர்கள் 24 மணி நேரமும் கடமை பார்க்க வேண்டியுள்ளதினால் இது சாத்தியப்படாது எனவும் சங்கம் கூறியுள்ளது. 71-கி

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் கடற்கரை வீதியிலுள்ள அம்மன் ஆலயம் யாழ் நக்கா வீதியிலுள்ள புனித திரேசம்மாள் ஆலயம் ஆகியவற்றில் கடந்த வாரம் உண்டியல் உடைக்கப்பட்டு பணமும் பெறுமதிமிக்க பொருட்களும் திருட்டுப் போயுள்ளதாக தெரிய வருகின்றது. -59


UNIVERSITY OF JAFFNA

## Tender Notice

Sealed tenders are invited from contractors registered for Civil Engineering works with ICTAD for the "Repairs to septic tank behind Dept. of Chemistry"

Tender forms can be obtained from Works Engineer. University of Jaffna until 10-07-95 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fees

01. Refundable - Rs 800/-
02. Non - refundable - Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a m. on 19-07-95.

Tender forms can be inspected free of charge at Maintenance Branch, University of Jaffna during office hours.

REGISTRAR

University of Jaffna,
P. O Box 57,
Jaffna.

A-5061


## இன்று

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி மகாவித்தியாலய பரிசளிப்புவிழா இன்று 3ம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.

முதன்மை விருந்தினராக பிரதேச கல்விப் பணிப்பாளர் [வலயம் 1] திரு. இ. சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பு. கணேசலிங்கமும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. எழிலனும் கலந்துகொள்வார்கள்.

0 0

[யாழ்ப்பாணம்]

யாழ். வண்ணை (ஐயனார் கோவலடி) ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 3ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை ரதோற்சவமும் 12ம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

0 0

[உடுவில்]

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 3ம் திகதி ஆரம்பமாகும்.

ஜூலை 11ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 12ம் திகதி புதன்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்த திருவிழாவும் நடைபெறும். 109

0 0

(யாழ்ப்பாணம்)

கிடத்தற்பளை வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். பத்தாம் நாள் தீர்த்த உற்சவம் இடம்பெறும். கி

## விஞ்ஞான பொது அறிவு தேர்வு

[யாழ்ப்பாணம்]

"நங்கூரம்" ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றம் நடாத்தும் விஞ்ஞான பொது அறிவு தேர்வு நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 1 மணிக்கு யாழ் இந்து, இணுவில் மத்திய கல்லூரி ஆகிய தேர்வு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 07 - 03

திங்கள் இரவு

8-02 கரும்புலிகள் தினத்தையொட்டி சிறப்புநிகழ்ச்சி
8-30 செய்திகள்
8-40 மண்டைதீவு தாக்குதலையொட்டி சிறப்புநிகழ்ச்சி

1995–07–04

செவ்வாய் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 இன்றைய தாரகை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச்செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணி வரை தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–07–03

திங்கள் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 ஆழியமுதம்
5-30 மாணவர் பக்கம்
6-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
6-02 நேயர் நெஞ்சம்
6-15 விளையாட்டுச் செய்திகள் அதனைத் தொடர்ந்து என் தெரிவு

# மூளை கட்டியை குணப்படுத்த சென்னையில் சிகிச்சை

[சென்னை]

மூளையில் ஏற்படும் கட்டியை 'எக்ஸ்' கதிர்கள் மூலம் சிகிச்சையளிக்கும் புதிய முறை இந்தியாவில் முதன் முதலாக சென்னை அப்லோ ஆஸ்பத்திரியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சை முறைக்கென 9 கோடி ரூபாவுக்கு நவீன தொழில்நுட்பக் கருவிகள் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன, மூளையில் ஏற்படும் கட்டிக்கு சிகிச்சையளிக்கும் இந்த முறை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கடந்த 10 வருடங்களாக நடைமுறையிலுள்ளது.

அமெரிக்கா, யப்பான், சீனுமற்றும் ஐரோப்பாவில்சில நாடுகளிலுமே இவ்வகையான சிகிச்சையளிக்கப்படுகிறது. இந்தியாவில் தற்போதுதான் முதன் முதலாக அதுவும் சென்னையில் இந்த சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மூளைக் கட்டிக்கு சிகிச்சை அளிக்கும் 8 நாடுகளில் இந்தியாவும் ஒன்றுகியுள்ளது' சி

# பொதுமக்கள் பாவனைக்கு 30 குழாய்க் கிணறுகள்

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் நந்நீர்ப் பிரச்சனையைத்தீர்க்குமுகமாக மாநகராட்சி மன்றம் யாழ் நகர்ப்பகுதிகளில் முப்பதுக்கும் மேற்பட்ட குழாய்க் கிணறுகள் அமைத்துள்ளது.

யாழ் நகர்ப் பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்களின் வேண்டுகோள்களுக்கிணங்க இக்குழாய்க் கிணறுகளை அமைக்கப் பட்டுள்ளன.

இதன்படி நாவாந்துறைப் பகுதியில் நாலு கிணறுகளும் குருநகர்ப் பகுதியில் இரண்டும் அரியாலையில் மூன்றும், பாஷையூரில் இரண்டும், நல்லூரில் இரண்டும், திருநகர், ஈச்சமோட்டை, செம்மணிவீதி, கொய்யாத்தோட்டம், சட்டநாதர்வீதி, எழிலூர், மகேந்திரபுரம், கொழும்புத்துறை, கணேசன்தோட்டம் ஆகிய இடங்களில் தலாஒருகிணறும் முத்திரைச்சந்தையில் மூன்று கிணறுகளும் அமைக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. 162-சி

# யாழ். அரச அதிபர் கொழும்பு செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய சேவைகள் ஆணைக்குழு அரசாங்க அதிபர்களுடன் நடத்தும் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் இன்று திங்கட்கிழமை கொழும்பு செல்லவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

யூலை மாதம் 5ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் அரச அதிபர் வடபகுதிக்கான அத்தியாவசிய உணவும் பொருட்கள் விரைவாக கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துக் கூறுவதுடன் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வேண்டிய உரவகை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான அனுமதி வழங்கப்படவேண்டிய அவசியம் பற்றியும் இக்கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -162-சி


## தமிழ் தட்டெழுத்தாளர்

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை, ஆங்கில தட்டெழுத்தில் அனுபவமும் க. பொ. த உயர்தரத்தில் சித்தியும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும் விரும்புவோர் தமது சொந்தக் கையெழுத்தில் 5-7-95 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்,

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

(ஏ-5053)

## பயிற்சி வினாத்தாள்கள்

(விடைகளுடன்)

இரண்டாம் தவணைப் பரீட்சைக்குத்தயாராகும் ஆண்டு- 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L மாணவர்களுக்காக எல்லா பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் 3-7-95 முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

BOND புத்தக நிறுவனம்

58, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5052)



கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோவில்

## ஆனி உத்தர திருவிழா 1995

நாளை (4-07-1995) செவ்வாய்க்கிழமை அதிகாலை 04–00 மணிக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு ஸ்நபன அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் தொடர்ந்து ஆருத்திரா தரிசனத்துடன் தெருவீதி உலா வருதல்

மங்கள இசை வழங்குபவர்கள்

அளவையூர் கலாசூரி N. K. பத்மநாதன் குழுவினர்கள்

விழா உபயகாரர்
கந்தையா உதயகுமார்
தில்லையம்பதி - 03-07-1995.

இங்ஙனம்
பரிபாலன சபை

(சி-1539)

### மணிவாக்கு

சிறிய பொருளாக இருப்பினும் பெரியவர்களை அடைந்தால் அது பெருமையடைகின்றது. பெரிய பொருளேயாயினும், சிறியவர்கள்பால் சேர்ந்தால் அவர்களால் அப் பொருளுக்குப் பெருமையுண்டாவதில்லை சேரப்பெற்றவனும் சிறப்படைவதில்லை.

— கிருபானந்த வாரியார்.

## நமது நோக்கு

### யுத்த ஆலோசனை சபை

யுத்தத்தில் படையினருக்கு ஆலோசனை வழங்குவதற்கு பதினன்கு பேரைக் கொண்ட யுத்த ஆலோசனை சபையை ஜனுதிபதி சந்திரிகா நியமித்துள்ளார். இச் சபையில் முன்னுள் ஆயுதப் படை அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் அடங்குவர். யுத்தத்தில் அனுபவசாலிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதே இக் குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் என்று ஜனுதிபதி சந்திரிகா கூறியுள்ளார். இதில் முன்னுள் பொலிஸ் மாஅதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய ருத்திரா ராஜசிங்கம் என்ற தமிழரும் அங்கம் வகிக்கிருர். இவரைப் பற்றி ஒரு சிறு குறிப்பு.

ஒருகாலத்தில் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சகல மக்களுக்கும் கோவிலுக்குள் செல்வதற்கு உரிமை வேண்டுமென்று போராட்டம் நடத்தியது. அப் போராட்டத்திற்கு எதிராக நேரடியாக நின்று எதிர்ப்போராட்டம் செய்தவர் டி, எஸ். சேனநாயக்காவுக்கு தனிச்சிங்கள அமைச்சரவை அமைப்பதற்கு வழிகாட்டிய சி. சுந்தரலிங்கமாகும். தனது தகப்பனுக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று பயந்த சுந்தரலிங்கத்தின் மகள் கவர்னர்ஜெனரலாக விளங்கிய குடும்ப நண்பனுன சேர் ஒலிவர் குணதிலகாவுக்கு முறையிட்டார். உடனடியாக ஒலிவர் அப்போது பிரதிப் பொலிஸ் மாஅதிபராக இருந்த ருத்திரா ராஜசிங்கத்தின் தலைமையில் ஒரு விசேட பொலிஸ் பட்டாளத்தை அனுப்பினுர். போராட்டம் முறியடிக்கப்பட்டது. அந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றியவர்தான் இப்பொழுது தமிழர்களுக்கு எதிரான போரில் சிங்களப் படையினருக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ளார்,

யுத்த ஆலோசனை சபை அமைத்ததற்கு வேறு உபகாரணங்களும் இருக்கின்றன. ஒரு விடயத்தை விரைவாக தீர்க்கமான முறையில் நடைமுறைப் படுத்த வேண்டுமாயின் உடனடியாக சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு துறைசார்ந்த அனுபவம் வாய்ந்த இருவரோ மூவரோ போதும். ஆனல் ஒரு விடயத்தை தட்டிக்கழிப்பதற்கும், உடனடி முடிவு எடுக்காமல் இருப்பதற்கும், அதற்கும் மேலாக விடயம் பிழைத்துவிட்டால் மற்றவர்களில் பழி போடுவதற்குமான வழி பரந்த அளவிலான பலரைக் கொண்ட குழுவை நியமிப்பதாகும். அதனுல் தான் பதினன்கு பேர் கொண்ட குழு நியமிக்கப் பட்டுள்ளது. பதினுலு கழுதைகளும் பதினுலு பக்கம் இழுக்கும். துறை சார்ந்த நிபுணர்களெனத் தம்மை எண்ணிக்கொள்ளும் ஒவ்வொருவரும் தான் சொன்னதுதான் சரி, தன் திட்டமே போரை வெல்ல உகந்தது என்று வாதாடி காலத்தை தாழ்த்துவார்கள். காலம் தாழ்த்தினுல் அரசின் ஆயுளும் முடியும் தறுவாயில் வந்துவிடும். இவ்விதம் பெரிய குழுக்களை நியமித்து முடிவு எடுக்கும் விடயத்திலிருந்து தப்பிக் கொள்வது அரசியல்வாதிகளுக்குப் பழக்கப்பட்ட செயல்.

யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக இருந்த இளைப்பாறிய திரு, சிறிகாந்தா அவர்கள் தமது அந்திம காலத்தில்தான் டி, எஸ். சேனநாயக்காவின் விவசாய அமைச்சின் செயலாளராக இருந்தபோது விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமானுல் ஓர் இரு துறைசார்ந்த நிபுணர்களுடன் ஆலோசித்துவிட்டு முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் கடத்த வேண்டிய தானுக முடிவெடுப்பதால் அரசியல் பாதிப்பு ஏற்படக்கூடிய விடயத்தில் பலரைக் கொண்ட பெரிய குழுவை நியமித்து தப்பிக்கொள்ள வேண்டுமென்றும் தனக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியதாய் கூறியிருந்தார். சந்திரிகாவும் அவ்விதம் நடப்பதாகவே தெரிகிறது.

# முன்னுள் சபாநாயகர் முகமதுவின் வீடு இனந்தெரியாதோரால் தாக்கு

(கொழும்பு)

தமது வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு பிரதமர் சிறிமாவின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்ட ஜீப் வண்டியே பயன்படுத்தப்பட்டதாகவும் முன்னுள் சபாநாயகர் எம். எச். முகமது நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: எனது வீட்டின் மீதான தாக்குதல் பாரதூரமானதொரு விடயமாகும். இதுபற்றி எதுவித விசாரணையும் நடாத்தப்படவில்லை. இன்னிலையில் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவே கருதுகிறேன்.

இந்த அரசு பதவிக்கு வந்தபின் எத்தனை பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள், எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது. சடலங்கள் தினமும் ஆறுகள், வாவிகளில் மிதக்கின்றன. இராணுவ தலைமையகத்துக்கு முன்னுல் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்

[5-ம் பக்கம் பார்க்க]

# போர்த் தளபாடங்கள் சரியில்லை; சீனுவுடனுன ஒப்பந்தங்கள் ரத்து!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் விமானங்கள் கப்பல்களை கொள்வனவு செய்வதற்கு சீனுவுடன் செய்து கொண்ட அனைத்து ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கம் தற்போது இஸ்ரேல் பிரான்ஸ், தென் கொரியா ஆகிய நாடுகளிடமிருந்து விமானங்களையும் கப்பல்களையும் கொள்வனவு செய்வதற்கு புதிய ஒப்பந்தங்களை செய்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தற்போதைய தாக்குதல்களுக்கு சீனுவின் விமானங்களும், கப்பல்களும் உகந்தவை அல்ல என்பதினுலேயே இலங்கை அரசு இந்த திடீர் முடிவை எடுத்துள்ளது.

தென் கொரியா இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து டோராப் படகுகளையும் பிரான்ஸிடமிருந்து அதிவேக தாக்குதல் படகுகளையும் நவீனரக குண்டு வீச்சு விமானங்களையும் கொள்வனவு செய்ய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

வி-சி

# கள்ளக்கடத்தல்களை முறியடிக்க இந்திய கடற்படை தீவிர ரோந்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான கள்ளக் கடத்தல்களை முறியடிக்க இந்திய கடற்படையினர் ஆழ்கடலில் ரோந்து நடவடிக்கைகளை தீவிரமாக்கியுள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான கள்ளக்கடத்தல் நடவடிக்கை புத்தளம் முதல் காலி வரையிலான பகுதியில் அதிகரித்திருப்பதாக புலனுய்வுத்தகவல்கள் தெரிவித்ததையடுத்தே ஆழ்கடல் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

இதற்கெனஇலங்கை சுங்கத்திணைக்களம் பயன்படுத்தவுள்ள ரோந்துப் படகுகள் கப்பலிலிருந்து கரைக்கு வானொலிச் செய்திகளை அனுப்பும்சாதனம் பொருத்தப்பட்டிருக்கும். இந்த ரோந்துப் படகுகள் கொழும்பு டொக்யாட் நிறுவனத்தால் உள்ளூரில் தயாரிக்கப்பட்டவை. இந்த நிறுவனம் கடற்படைக்கான ரோந்துப்படகுகளையும் தயாரித்துள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

-சி

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சமூகசேவை உத்தியோகஸ்தர் நன்நடத்தை அதிகாரிகளுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதற்கான அனுமதி அட்டைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களினூடாக பரீட்சார்திகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ் பிரதேச செயலர் பிரிவில்உள்ளபரீட்சார்த்திகள் செயலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளை உடனடியாக பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

170-சி

## பலதும் பத்தும்

### ஆர்வம் – வேறுபாடு

மைதானத்திற்கு செல்வாது இலட்சக்கணக்கானவர்கள் வீட்டிலிருந்தே தொலைக்காட்சி மூலம் விளையாட்டுக்களை இரசிக்கிருர்கள் அல்லவா!

இந்த இரசனை- விளையாட்டு ஆர்வம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. இலங்கை, இந்தியாவைச் சேர்ந்தவர்கள் கிரிக்கெட் பிரியர்கள். தற்போதைய ஜனுதிபதி சந்திரிகாவின் தம்பி அனுரா கூட 'அரசியலை விட கிரிக்கெட்டில் ஆர்வம் காட்டுகிருர் என கேலி பேசப்பட்டது......!

சீனர்களுக்கு கரபந்தாட்டமும், தென் கிழக்காசிய நாடுகளைச் சார்ந்தவர்களுக்கு பாட்மின்ரனும், அமெரிக்கர்களுக்கு கூடைப்பந்தாட்டமும், கனடாக்காரருக்கு பனிக்கட்டியில் விளையாடும் ' ஹொக்கியும் மிக விருப்பமாகும...!

— மயூரன்

# இல. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் ஊழியர்கள் குறைப்பு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் தமிழ் ஊழியர்கள் திட்டமிட்டுகுறைக்கப் பட்டுள்ளதாக புகார்தெரிவிக்கப்படுகிறது.

1983ற்கு முன் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் தமிழ் ஊழியர்களின் எண்ணிக்கை 176ஆக இருந்ததெனவும் தற்போது 85ஆக உள்ளதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்இசைப்பிரிவில் பழைய வாத்தியங்களே உள்ளன என்றும் இன்னும் புதிய வாத்தியங்கள் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ரூபவாஹினியிலும் தமிழ் தயாரிப்பாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப் படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆகியவற்றின் தமிழ் நிகழ்ச்சிகளின் முன்னேற்றம் குறித்து நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றிலே மேற்படி விடயங்கள் பலராலும் சுட்டிக்காட்டப் பட்டன.

ரி-சி

## யாழ். ஆஸ்பத்திரியில்

# முச்சக்கர வண்டிகள் பழுதடைந்தன அத்தியாவசிய சேவைகள் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனு வைத்திய சாலையின் முறிவு நெரிவு மின் ஒட்டுத் தொழிற்சாலையின் ஸ்தம்பிதநிலையினுல் வைத்திய சாலையில் நோயாளரை ஏற்றிச்செல்வதற்காக பயன்படுத்தப்படும் முச்சக்கரவண்டிகள், நான்கு சக்கர வண்டிகள் பல பழுதடைந்த நிலையில் மூலைக்கு மூலை முடக்கி வைக்கப்பட்ட நிலையிலுள்ளன.

அதிகளவு நோயாளர்கள் வைத்தியசாலையில் விடுதியில் தங்கி சிகிச்சைபெறவரும் இக்கால வேளையில் நோயாளரை ஏற்றிச் செல்வதற்காக பாவிக்கப்படும் இவ் வண்டிகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் நோயாளர் கடும் சிரமங்களையும், வேதனைகளையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

வெளிநோயாளர் பகுதியில் பாவனையில் இருந்து வந்த பத்துக்கும் மேற்பட்ட மேற்படி வண்டிகளில் தற்போது மூன்று, நான்கு வண்டிகளே சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. அவையும் பழுதடைந்த நிலையிலேயே இயங்குகின்றன.

இதேபோலவே விடுதிகளில் உள்ள வண்டிகளும் மோசமான நிலையிலேயே இயங்குகின்றன.

பழுதடைந்த வண்டிகளை உடனுக்குடன் பழுதுபார்த்து திருத்தியமைத்து வந்த மின் ஒட்டுத் தொழிற்சாலைக்கு மின்சார விநியோகம் மட்டுப் படுத்தப்பட்டது காரணமாக அடைந்துள்ள ஸதம்பித நிலையால் பழுதடைந்த வண்டிகள் அப்படியே திருத்தப்படாத நிலையில் இருக்கின்றன.

இந்நிலை இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு நீடிக்குமெனில் நோயாளரை கைத்தாங்கலாக தூக்கியோ அழைத்தோ செலல வேண்டிய நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

90-சி

இயற்கை வளம் எங்கள் செல்வம் அதை
இயன்ற மட்டும் பேணுவோம் வாரீர்

# தப்பியோடியவர் யாழ். நகரில் கைது

(நெல்லியடி)

பருத்தித்துறை தமிழீழ காவல் பணிமனையிலிருந்து தப்பியோடிய கைதி ஒருவர் யாழ். நகரில் வைத்து பலத்த எதிர்ப்பின் மத்தியில் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்-

மணம் புரிந்து தாபரிப்புப்பணம் செலுத்தத் தவறிய குற்றத்தினுலேயே இவர் காவல் மணிமனையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தப்பியோடிய இக்கைதியை தேடி வலைவிரித்த காவல் துறையினர் யாழ்நகரில் வைத்துக்கைதுசெய்தனர். 160-மி

# அனர்த்தங்கள் ஏற்படின் மக்களை தங்கவைக்க 5பாடசாலைகள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேசசெயலாளர் பிரிவில் அனர்த்தங்கள் ஏதுவும் ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்ந்தால் அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை யாழ் பிரதேசச் செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென ஐந்து பாடசாலைகளை பிரதேச செயலகம் தெரிவு செய்துள்ளது.

இதில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ் நாவலர் வித்தியாலயம், யாழ். புனித திரேசா வித்தியாலயம், அரியாலை பார்வதி வித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அனர்த்தங்கள்ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்ந்தால் பாடசாலைகளிலேயே மக்கள் தங்க வைக்கப்படுவார்கள் என்று யாழ். பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த புதன் கிழமை மண்டைதீவில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது631குடும்பங்கள் கரையோரப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சமடைந்ததாக செயலக புள்ளிவிபரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது,

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் 290குடும்பங்களும், சென் சாள்ஸ் ம. வி.யில் 62 குடும்பங்களும், யாழ். திருக்குடும்ப கன்னியர் வித்தியாலயத்தில் 91 குடும்பங்களும், யாழ். புதனி திரேசா வித்தியாலயத்தில் 30குடும்பங்களும், கொழும்புத்துறை சந்தான மாதா கோவிலில் 111குடும்பங்களும், யாழ் நவீன சந்தைப் பகுதியில் 87 குடும்பங்களும், புனித சென். ஜேம்ஸ் வித்தியாலயத்தில் 50குடும்பங்களும் தஞ்சமடைந்ததும் தெரிந்ததே. 162-170-சி

## மேலதிக உணவு முத்திரை அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரணத்திட்டத்தின் கீழ் இலவச உணவு முத்திரை பெறுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து புதிதாக விண்ணப்பம் செய்திருந்த விண்ணப்பதாரிகளுக்கான இலவச உணவு முத்திரை கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லையென யாழ் பிரதேசச் செயலர் கலாநிதி குணராசா தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த காலங்களில் தொடர்ச்சியாக உணவு முத்திரை பெற்று வந்தவர்களுக்கான உணவுமுத்திரைகளே கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. புதிதாக இலவச உணவுமுத்திரை பெறுவதற்கு விண்ணப்பம் செய்திருந்த விண்ணப்பதாரிகளுக்கு இதுவரை இலவச உணவு முத்திரைகள் அனுப்பி வைக்கப்படவில்லை என்ருர். 162- சி

## தலையில் விழுந்த பலத்த அடியால் கண்பார்வை கிடைத்தது காது செவிடாகியது

(புதுடில்லி)

20 வருடங்களாக கண் பார்வை இழந்திருந்த நபர் ஒருவரின் தலையில் பலத்த அடி விழுந்ததும் திடீரென கண் பார்வை பெற்ருர். ஆனுல் அவரது காது செவிடாகியது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: இந்தியாவில் அஜ்மர் என்னும் இடத்தைச் சேர்ந்த 60 வயதான வயோதிபர் ஒருவர் கடந்த 20வருடங்களாக தனது இரண்டுகண்களினதும் பார்வையை இழந்து வாழ்ந்து வந்தார்.

அண்மையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்டவிபத்திஞல் இவரின் தலையில் பலத்த அடி ஏற்பட்டது. என்ன ஆச்சரியம்! கண்கள் ஒளிபெற்றன. ஆனுல் மறுநிமிடம் காதுகள் இரண்டும்செவிடாகின. காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

வைத்திய நிபுணர்கள் இதற்குரிய காரணத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். -71

## வடமராட்சிக் கடலில் ஹெலியிலிருந்து சூடு

(நெல்லியடி)

வடமராட்சிக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் மீது ஹெலி கலிபர் தாக்குதலை நடத்தியதால் மீனவர்கள் கட்டுமரங்களை கடலில் கைவிட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர்,

இச்சம்பவம் நேற்று முந்தினம் காலை 7-00 மணியளவில் வல்வெட்டித்துறை பொலிகண்டிக் கடலில் இடம்பெற்றது.

ஆனையிறவுப் பகுதியிலிருந்து கடற்பரப்பின் மேலாக திடீரென வந்த ஹெலிகொப்டர் மீனவர் மீது வேட்டுக்களைத் தீர்த்தது. மீனவர்கள் உடனடியாக கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தனர். எவரும் காயமடையவில்லை. 160 சி

## பனைமரம் முறிந்து வீழ்ந்தது

(யாழ்ப்பணம்)

நவக்கிரிநிலாவரைப்பகுதியில் கடுங்காற்றுக்காரணமாக பனைமரம்ஒன்று முறிந்து வீடொன்றின்மேல் விழுந்ததால் வீடு பலத்தசேதமடைந்தது, வீட்டினுள் இருந்த இளம்பெண்படுகாயமடைந்தார்.

வசாவிளான் குட்டியப்புலம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து நவக்கிரியில் வசித்துவரும் சிவனடி சிவராணி (வயது 20) என்பவர் படுகாயமடைந்து, யாழ் போதனை வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90-சி

## நரம்பியல் நிபுணர் ராமமூர்த்திக்கு சிறந்த டாக்டர் விருது

(சென்னை)

சென்னையைச் சேர்ந்த பிரபல மூளை நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் வி. இராமமூர்த்திக்கு 1994-ம் ஆண்டு சிறந்த மருத்துவ நிபுணருக்கான அகில இந்திய 'ராய்' விருது வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் இராமமூர்த்தி தற்பொழுது சென்னை மருத்துவமனையில் கடமை புரிந்து வருகின்ருர்.

தந்தை செல்வாவிற்கு சிகிச்சை வழங்குவதற்காக இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. முன்னுள் முதல்வர் எம், ஜி. ஆருக்கும் இவர் பல வருடங்கள் சிகிச்சையளித்துள்ளார். க-சி

## 20 ஆயிரம் வெளிநாட்டவர் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் இருபதிஞயிரம் வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாகத் தங்கியிருப்பதாக குடிவரவுகுடியகல்வுத்திணைக்களம் தெரிவித்துள்ளது

இவர்களில் அனேகமானேர் தற்காலிக விசா பெற்று இலங்கை வந்தவர்களாவார்.

காலாவதியான அல்லது செல்லுபடியற்ற விசாவுடன் தற்போது இங்கு தங்கியுள்ள இவர்களைக்கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது

இத்தகையோரில் பலர் பாலியல் மற்றும் சமூகவிரோத குற்றங்களுடன் சம்மந்தப்பட்டவர்கள் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. கி

## இடம்பெயர்ந்தமாணவர்க்கு விஷேட வகுப்புக்கள்

(வடமராட்சி)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தும் அச்சம் காரணமாக பாடசாலைக்கு செல்லாத க. பொ. த. சாதாரண தரமாணவர் நன்மை கருதி விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

கணித விஞ்ஞான பயிற்சி விசேட வகுப்புக்கள் யாழ் கல்வித் திணைக்கள வலயம் [2] இரண்டின் கணித மூலவள நிலையத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்களுக்குகோப்பாய் மகா வித்தியாலய மூலவள நிலையத்தில் வகுப்புகள் காலை 8. 00 முதல் மாலை 3. 30மணி வரை நடைபெறும்எனவித்தியாலய அதிபர் எஸ்.இராசதுரை தெரிவித்துள்ளார். -51

## புத்தூரில்மோதல் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற காணித் தகராறு ஒன்றினுல் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோதலின் போது எதிரிக் குழுவினரின் கல்லெறிகளினுலேயே இவர் தலையில் இருந்து கால்வரை பலத்தகாயங்களுக்கிலக்காஞர்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த கந்தையா செல்வராசா (52 வயது) என்பவரே படுகாயமடைந்து யாழ் போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கத்பட்டுள்ளார். 90- சி

## வீடு செல்லும் பொலிஸார் கடமைக்கு திரும்புவதில்லை

(கொழும்பு)

கிழக்கில் கடமைபுரியும் பொலிஸாரில் பலர் விடுமுறையில் தமது வீடுகளுக்குச் சென்று மீண்டும் கடமைக்குத் திரும்பவில்லை.

வாழைச்சேனை பொலிஸில் இருந்து விடுமுறையில் சென்ற 15 பொலிஸார் இன்னமும் கடமைக்குத்திரும்பவில்லை.

இதே போன்றுகளுவாஞ்சிக்குடியிலிருந்து விடுமுறையில் வீடு சென்ற 33 பொலிஸாரும் இன்னமும் பொலிஸ் நிலையம் திரும்பவில்லை. கி-சி

## 2 இந்து ஆலயங்கள் சுவிஸில் அமைப்பு

(சூரிச்)

சுவிஸ் நாட்டில் இரண்டு சைவாலயங்கள் உருவாக்கப்பட்டு நாளை 04-ம் திகதி மகா கும்பாபிசேகவிழா நடைபெறவுள்ளது.

ஈழத் தமிழர்கள் சுவிஸ் நாட்டில் ஒன்று கூடி இரண்டு ஆலயங்களைப் புதிதாக அமைத்துள்ளார்கள். அந்த நாட்டின் அரசாங்கத்தின் அனுமதியுடன் பிள்ளையார் கோவில் ஒன்றையும் கிருஷ்ணர் கோவில் ஒன்றையும் புதிதாக வர்ண வேலைப்பாடுகளுடன் நிறைவு செய்து ஆனி உத்தரத் தினமான நாளை 04ம் திகதி அதிகாலை மகாகுட முழுக்கு விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மகா கும்பாபிசேகத்திற்கான பூர்வாங்க கிரியைகள் 29-06 95 அன்று ஈழத்தின் தலை சிறந்த சிரேஷ்ட சிவாச்சாரியர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது- இந்த கும்பாபிசே

(5ம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு தொடர் உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேசசெயலகம் இடம் பெயர்ந்தவர்களுக்கான 9 தொடர் உணவு முத்திரைகளை வழங்கி வருகின்றது.

இதனைவிட இடம் பெயர்ந்தவர்களுக்கான 10 தொடர் முத்திரைகளும் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இம்முத்திரைகளையும் இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகிப்பதற்கு யாழ் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. -170

## இராசி பலன்

03-07-1995

திங்கட்கிழமை

[தமிழுக்கு ஆனி-19]

பஞ்சமிமு: ப. 11-23 வரை, பூரம் சித்தயோகம் பி.இ. 5-17வரை, குமாரஷஷ்டி விரதம், இராகு காலம் காலை 7-27 முதல் 8-57 வரை, சுப நேரம் காலை 11-57 முதல் 1-27 வரை.

மேடம்: திருப்தியற்ற நிலை, தொழில் மந்தம், சுபவிரயம்.

இடபம்: புத்திரர் கவலை, அவப்பெயர், குடும்பபகை.

மிதுனம்: சாமர்த்தியம், காரிய பலிதம், பயணம்.

கடகம்: மனதில் குழப்பம், தொழில் பகை, அலைச்சல்.

சிங்கம்; புதிய முயற்சி, அறிஞர் பாராட்டு, பணவரவு.

கன்னி; மருந்துச் செலவு, உறவினர் அனுகூலம், வருவாய் பாதிப்பு.

துலாம்: அபிலாசை நிறைவேறல், செல்வாக்கு, மகிழ்ச்சி

விருச்சிகம்: தாய்வழி உதவி, சுபகாரியம், கடித உறவு.

தனுசு; தொழில் நஷ்டம், வீண்தகராறு, மனஸ்தாபம்.

மகரம்: கருத்து வேறுபாடு, மனைவி துயர், கண்டிப்பு.

கும்பம்; அதிக பொறுப்பு, தொழில் லாபம், நண்பர் வருகை.

மீனம்: குடும்ப மகிழ்ச்சி, சமயோசித செயல், கடன் வரவு.

— ஜோஸ்யர்

# சந்திரிகாவின் ஆட்சியிலும் தெற்கில் சடலங்கள் மிதக்கத்தொடங்கிவிட்டன

(கொழும்பு)

தென் பகுதில் வாவிகள், ஏரிகளில் திருமதி சந்திரிகா ஆட்சியிலும் மீண்டும் சடலங்கள் மிதக்கத் தொடங்கியிருப்பதாக பி. பி.சி. தெரிவித்தது.

இது பற்றி பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கையில்:

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோ அல்லது வேறு தடயங்களோ காணப்படவில்லையென சடலங்களைப் பரிசோதனை செய்த வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உண்பதற்கு உணவு எதுவும் கொடுக்கப்படாது பட்டினி போடப்பட்ட நிலையிலே இத்தகைய மரணங்கள் சம்பவித்திருக்கலாம்.

பல நாட்கள் உணவு உட்கொள்ளாமைக்குரிய தடயங்கள் சடலத்தின் குடல் பகுதியில் காணப்பட்டதாகவும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்

கொழும்புக்கு வெளியே நீர் கொழும்புக் கடற்கரையிலும் பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முன்னைய ஐ. தே. ஆட்சிக் காலத்தில் ஆறுகள் குளங்கள் கடற்கரைகளில் பல சடலங்கள் சூட்டுக் காயங்கள், வெட்டுக் காயங்களுடன் காணப்பட்டமை தெரிந்ததே.

தற்போதைய பொது சன ஐக்கிய முன்னணியினர் கடந்த கால அரசாங்கத்தில் நிலவிய மனிதப் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறலை ஒழிக்கப்போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தனர். எனினும் இந்தச் சம்பவங்கள் இந்த ஆட்சியிலும் தொடர்வதாகவும் பி. பி. சி தெரிவித்தது. - க

## 'ஜெ'யின் தோழிக்கு வருமானவரி நோட்டீஸ்

(சென்னை)

மோசடிக் குற்றச் சாட்டிற்காக இந்திய வருமானவரித் துறை முதல்வர் ஜெயலலிதாவின் மிக நெருங்கிய தோழியான சசிகலாவுக்கும் மற்றும் ஐவருக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

அரசுக்கு சொந்தமான இரண்டரை கோடி ரூபா மதிப்புடைய பங்களா ஒன்றை 54 லட்சம் ரூபாவுக்கு வாங்கியது எப்படி எனக்கேட்டே இவர்களுக்கு வருமான வரித் துறை கூட்டாக நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த பங்களாவை வாங்க வருமானம் எப்படிக்கிடைத்தது என்பதை தெரிவிக்க வேண்டுமெனவும் அந்த நோட்டீஸில் குறிப்பிடப் பட்டுள்ளது. -சி

## இளைஞர், யுவதிகளை விற்ற ஒருவர் பிடிபட்டார்

(கொழும்பு)

இளைஞர் யுவதிகளை விற்பனை செய்து வந்த 54 வயது நபர் ஒருவரை இரத்தினபுரியில் வைத்து ஹொரணைப் பொலிசார் மடக்கிப் பிடித்தனர்

நீண்ட காலமாக இத்தொழிலில் ஈடுபட்டு வந்த இந்நபரை கடந்த வாரம் ஹொரணைப் பஸ் நிலையத்தில் வைத்து கைது செய்யும்போது இவருடன் 10 வயதுக்கும் 26 வயதுக்குமிடைப்பட்ட இளைஞர் யுவதிகள் காணப்பட்டனர். -71-கி

# கிழக்கைப் பாதுகாப்பதா? வடக்கில் தாக்குதல் நடத்துவதா?

## அரசு திணறுகிறது

(கொழும்பு)

வடபகுதியில் தாக்குதல் நடத்துவதா? அல்லது கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் புலிகளின் தாக்குதலை முறியடிப்பதா? என்று முடிவெடுக்க முடியாத நிலையில் அரசு திண்டாடுகின்றது.

மூன்றுவது ஈழப்போர் ஆரம்பமானதிலிருந்து கிழக்கில் புலிகளின் கையே ஓங்கி வருகிறது. வடபகுதியை தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள் கிழக்கையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் நோக்குடன் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்

புலிகளின் தொடர் தாக்குதலினால் கிழக்கில் போரிடும் உறுதியை படையினர் இழந்து வருகின்றனர். இதனால கிழக்கில் பல படைமுகாம்களைமூட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது

இதேவேளை வடக்கிலும் புலிகளின் பலம் பெருமளவு அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இந்நிலையில் வடபகுதி மீது தாக்குதல் நடத்தி தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதா? அல்லது கிழக்கு மாகாணத்தில் தமது பலத்தை அதிகரிப்பதா? என்பது குறித்து முடிவெடுக்க முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. ரி-ஒ

## வாகனங்களில் நிழல் கண்ணாடிகள் பொருத்தத் தடை

(கொழும்பு)

தெற்கில் நிழல்படுத்தப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது

நிழல்படுத்தப்பட்ட கண்ணாடிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் பயணம் செய்வோரை ஏனையோரால் இலகுவில் அடையாளம் காணமுடியதிருப்பதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அது பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்னர்.

இதனால் வாகனத்தின் சகல கண்ணாடிகளுக்கும் வர்ணம் தீட்டுவதோ அல்லது அலங்காரம் செய்வதோ தண்டனைக்குரிய குற்றமாகப்பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. -கி-சி

## தமிழக மாணவர்களுக்கு ஜெயலலிதா பாடமாகிறார்

(சென்னை)

தமிழகத்தில் ஆறும் வகுப்பு தமிழ் புத்தகத்தில் முதல்வா ஜெயலலிதா பற்றிய பாடம் இடம்பெற்றுள்ளது.

தில்லையாதி, வள்ளியம்மை போன்றோர் பற்றி ஆறும் வகுப்பு தமிழ் புத்தகத்தில் பாடங்கள் இடம்பெற்றுள்ளது இந்த வரிசையிலேயே முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கைக்குறிப்புகள் அவரது சாதனைகள் பாடமாக புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

இது தமிழ் படிக்கும் மாணவர்க்கு கொடுக்கப்பட்டுள்ள மாபெரும் தண்டனை என தமிழக அரசியல்வாதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். -சி

### 2 இந்து ஆலயம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி

கத்தை நடத்தும்பொருட்டு யாழ்ப்பாணத்திலிருந்து சிவாச்சாரியர்கள் அண்மையில் சுவிஸ் சென்றுள்ளனர்.

(155-சி)

## இளவயது தமிழ் டாக்டருக்கு கிளிங்டன் பாராட்டு

[சிக்காகோ]

தமிழ்நாட்டைச் சேர்ந்த உலகிலேயே மிக இளவயது மருத்துவரான டாக்டர் பால முரளி கிருஷ்ண அம்பாதியை அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் நேரில் சந்தித்து பாராட்டினர்.

சிக்காகோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய டாக்டர்கள் மாநாட்டில் உரை நிகழ்த்திய அமெரிக்க அதிபர், இளவயதில் மருத்துவரான திரு. அம்பாதியின் சாதனையைப் பாராட்டினர்.

திரு. அம்பாதியின் சகோதரரும் 19 வயதிலே டாக்டரான செய்தி கேட்டு தான் வியப்படைந்ததாக அமெரிக்க அதிபர் கூறினர்.

பின்னர் அதிபர் அம்பாத்தியுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டதுடன் சிறிது நேரம் உரையாடினர். வெள்ளை மாளிகைக்கு வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

## கரையோர மக்கள் இரவில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

கரையோர பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவு நேரங்களில் வீடுகளில் தங்க அஞ்சி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியில் இருந்து இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை இரவு நேரங்களில் மேற்கொண்டு வருவதாலேயே கரையோர பகுதி மக்கள் இரவில் இடம் பெயர்ந்தும், பகலில் வீடுகளில் தங்கியும் வருகின்றனர்,

குருநகர், பாஷையூர் பகுதிகளை சேர்ந்த மக்களே இரவில் இடம்பெயர்ந்தும் செல்கின்றனர். (170 சி)

### எல்லை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதை விட தமது முகாம்களைப் பாதுகாப்பது படையினருக்கு தற்போது அவசியமாகி விட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது சிங்களக் கிராமங்களை பாதுகாக்கும் படையினர் வடக்கு கிழக்கு யுத்த முனைகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படவுள்ளனர். -ரி

## இரவு நேரத்தில் குடும்பஸ்தருக்குவாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

இரவு படுக்கைக்குச் சென்றவர் பத்து மணிக்கு வந்து அழைத்த இனந் தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட வாள்வெட்டினால் தலையில் படுகாயமடைந்தார்.

சுன்னாகம் மதவடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சின்னத்துரை சிவராமகிருஷ்ணன் [வயது 44] என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாது: இரவு படுக்கைக்குச் சென்றவரை யாரோ அழைக்கும் குரல்கேட்டதை அடுத்து விளக்குடன் வெளியே வந்தபோது, வெளியில் நின்றவர் என்னைத் தெரியுமா எனக் கேட்க தனக்குத் தெரியவில்லை எனக் கூறிக்கொண்டு. காயமடைந்தவர் பின்னால் நகர முற்பட்டவேளை, அந்த இனந் தெரியாத நபர் வாளால் ஓங்கி தலையில் வெட்டிவிட்டு பாய்ந்து ஓடியதாக காயமடைந்தவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார். 90-சி

## நீர்த்தாங்கியில் ஏறி பேராட்டம் நடாத்திய 20 பொலிஸாரும் வேலைநீக்கம்

[கொழும்பு]

திஸ்ஸமகராம பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த இருபது பொலிசார் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தண்ணீர்த் தாங்கியிலேறி உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தியதற்காகவே இவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த இரு பொலிசார் பொதுமக்களைத் தாக்கிய குற்றத்தின்பேரில் வேலைநீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இப் பொலிசார் தண்ணீர்த் தாங்கியிலேறி உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தியிருந்தனர். கி-சி

### பேரிழப்புக்கள்

1-ம பக்கத் தொடர்ச்சி)

பிடிவாதமாக இருந்தார்.

இவ்விடயத்தில் முரண்பாடுகள் காட்டிய ராணுவ அதிகாரிகளை முக்கிய பொறுப்புகளில் இருந்து அரசாங்கம் மாற்றம் செய்தது. பின்பு வேறு அதிகாரிகளை வடபகுதி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமித்தது,

தற்போது அவர்களால் கூட புலிகளின் மண்டைதீவு தாக்குதல்களை முறியடிக்க முடியவில்லை இதனால் யாழ்- நகரை கைப்பற்றும் திட்டமும் செயலிழந்து போயுள்ளது.

இவ் அதிகாரிகள் தமக்கு விமான படை' கடற்படை என்பவற்றின் உதவி கிடைக்கவில்லை எனக்காரணம் கூறுகின்றனர்.

இந்நிலையில் அரசும் படை அதிகாரிகளும் கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கிலும் படையினர் சரிவரச் செயற்படவில்லையென கேணல் ரத்வத்த படையினரைக்கண்டித்துள்ளார். -ரி

## யுத்தத்திற்கு முடிவு கட்ட சந்திரிகா உறுதி

(கொழும்பு)

நாட்டிற்கு பெரும் தலையிடியாக உள்ள பதினேழு வருட கால வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு ஒருமுடிவு கட்டப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

காலியில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினர்,

யுத்தத்தை இனியும்தொடரும் எண்ணம் அரசிற்கில்லை, யுத்தத்தை நிறுத்த அரசு எடுக்கும் முயற்சிக்கு ஏற்படுத்தப்படும் தடைகளை அகற்றவும் அரசு உறுதியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். -கி-சி

### முன்னாள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டது! இராணுவ தலைமையகத்திற்கு பாதுகாப்பு இல்லாவிடின் எனதுவீட்டுக்கு எப்படி பாதுகாப்பு கிடைக்கும் எனவும் அவர் கேள்வி எழுப்பினர், -சி

### மீனவர்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிப் பிரயோகத்தினல் மீனவர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு 8 30 மணியளவில் காரைநகர் இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இதன் சேதவிபரங்கள் தெரியவரவில்லை. 162-ரி

# இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வை நாடும் எண்ணம் தெற்கில் அதிகரிப்பு!

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு இராணுவ தீர்வை நாடும் எண்ணம் தெற்கிலே தீவிரமடைந்து வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது

பௌத்த பிக்குகள், சிங்களக் கல்விமான்கள், இனவாத அரசியல்வாதிகள் என்ற வரிசையில் பலர் இராணுவ தீர்வுக்கான தமது ஆதரவை அரசுக்கு தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை அரசின் தேசிய பாதுகாப்பு நிதிக்கும் பெருமளவில் உதவுவதற்கு சிங்கள இனவாதிகள் முன் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தில் மேல் நிலை அடைந்து வரும் தமிழரின் வளர்ச்சி குறித்து அதிருப்தி கொண்டுள்ள சிங்கள இனவாதிகள் பலர் அரசுக்கு யுத்தத்தை தொடரவும் அதன் மூலம் இராணுவ ரீதியான தீர்வொன்றை ஏற்படுத்தவும் ஆலோசனை வழங்கி வருகின்றனராம்.

மூன்றும் ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் பெருமளவு இழப்புக்களை அரச படையினர் சந்தித்து வருவதனால் பெரும் கவலையடைந்துள்ள இவர்கள் இனப் பிரச்னை தீர்வுக்கு இராணுவ தீர்வை வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. -ரி

## உரியகாலத்தில் நிவாரணம் கிடைப்பதில்லையென புகார்

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் நிவாரணங்கள் இழுபறி நிலமைக்கு உள்ளாகியுள்ளன

இடம் பெயர்ந்தவர்களுக்கென உணவுப் பொருட்களை ஏற்றி இறக்கும் லொறிகளை இராணுவத்தினர் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து தமது தேவைகளுக்கு எடுத்துச் சென்று விடுவதனாலே உணவுப் பொருட்களை உரிய காலத்தில் அனுப்பி வைக்க முடியாமலுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சு தமக்கு அனுப்பி வைக்கும் உலர் உணவு நிவாரணம் தமக்கு கிரமமாக கிடைப்பதில்லை என்று இப் பகுதிகளிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். -ரி

# உணவுப்பொருள்விநியோகம்குறித்து கூ. சங்கங்கள் மீது கண்காணிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் நேற்று தெரிவித்தார்.

யாழ். செயலகம் கப்பல் மூலம் வரும் பொருள்களைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகித்து சங்கங்கள் அதனை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

இவ்வேளையில் மக்களுக்கு பொருள்கள் தாரளமாகக் கிடைக்கக்கூடிய வகையில் அதற்கான நடவடிக்கையை அவ்வப் பகுதி பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் உணவுப் பொருள்கள் மக்களுக்கு இல்லை என்று சொல்லாத அளவுக்கு வழங்க வேண்டும். ஆனால் ஒரு சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீது மேற்கொண்ட ஆய்வின் போது பொருட்கள் விநியோகிக்காமல் இருந்ததைக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (170-ரி)

## 400 பாடசாலைகள் அமைக்கப்படும்

(கொழும்பு)

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் 400 பிரபல பாடசாலைகள் நாடு முழுவதும் அமைக்கப்படவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரன தெரிவித்துள்ளார்.

மாவட்டங்கள் தோறும் 4 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்யப்படும் என்றும் இத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் உலக வங்கியின் உதவியுடனும் செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். க- ரி

## மன்னார் தீவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது

ஒரேயொரு போக்குவரத்து வழியான மன்னார் கற்பிட்டி கடல் வழி போக்குவரத்து சிறிலங்கா கடற்படையினரால் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் மிகச் சொற்ப அளவான பொருட்களையும் பயணிகளையுமே அவர்கள் அனுமதிக்கின்றனர்.

இதேவேளை மன்னார் தீவில் ராணுவத்தினரின் கெடுபிடிகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

கடற்றொழிலுக்கு செல்லும் அப்பாவி மீனவர்கள் கடும் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆனால் தமது தேவைகளுக்கு மட்டும் மீனவர்களை கடலுக்கு செல்லப் படையினர் அனுமதிக்கின்றனர்.

மன்னார் தீவில் சுமார் 32,636 பேர் தற்போது வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. -ரி

## மண்டைதீவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தீவில் கெமுனு வோச் படைப் பிரிவு நிறுத்தப்பட்டிருந்தது குறித்து பாதுகாப்பு அமைச்சு தனது அதிருப்தியை படை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து வடபகுதியில் கடமையாற்றும் முக்கிய படை அதிகாரிகளை இடம் மாற்றும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்செய்தியை ஊர்ஜிதப்படுத்தி வடபகுதிகளிலுள்ள சிறிலங்கா படை அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக 'ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. -ரி

## 4608 மாணவர்களுக்கு மஹாபொல பரிசில்!

(கொழும்பு)

இவ்வாண்டு 4608 மாணவர்கள் மஹாபொல புலமைப் பரிசில் பெறுகின்றனர். புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவம் கொழும்பில் இன்று இடம்பெறுகின்றது.

இன்றைய பரிசில் வழங்கல் நிகழ்வுகளில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட உள்ளதாகவும் ஏனையோருக்கு மாவட்ட மட்டத்தில் ஜுலை மாதத்திற்குப் பின்னர் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஐயனார் கோயிலடி ஸ்ரீ விசுவேச விநாயகப் பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 3-ம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகும். மகோற்சவ உற்சவங்கள் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (ரி)

10 கோடி ரூபா செலவில் நிறுவப்பட்ட

## அம்பாறை நெல் ஆலை கைவிடப்பட்ட நிலையில்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் 10 கோடி ரூபா செலவில் 15 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட அரசாங்க நெல் ஆலை கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றது

சகல இயந்திர உபகரணங்களும் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருக்கின்றன இயந்திரங்களின் சில பகுதிகள் திருடர்களால் திருடப்பட்டுள்ளன. நெல் ஆலையைச் சுற்றியுள்ள இடம் பழுதாகியுள்ளது.

இலங்கையில் கூடுதலாக நெல் உற்பத்தி செய்யும் மாவட்டங்களில் அம்பாறையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. ம-ரி

## வானொலி வருமானத்தில் 90 லட்சம் ரூபா வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் வருமானம் தினமும் வீழ்ச்சியடைந்து செல்வதாக கொழும்புப்பத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

1993ம் ஆண்டிலிருந்து இந்த வருமான வீழ்ச்சிகாணப்படுகிறது. 1994ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தில் 90 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. கி-ரி

# யாழ். குடாவில் கரும்புலிகள் தினம் உணர்வுடன் அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கரும்புலிகள் தினத்தை உணர்வுடன் அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது. கரும்புலிகள் தினமான யூலை 5ம் திகதியைச் சிறப்பாக அனுஷ்டிக்கும் முகமாக யாழ் நகர் எங்கும் கரும்புலிகள் தினத்தை நினைவுபடுத்தும் பாதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன

யாழ். நகரில் பிரதான இடங்கள் சிவப்பு மஞ்சள் நிற வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கரும்புலிகளின் வீரவரலாறுகளைச் சித்தரிக்கும் சுலோகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் அங்காங்கே ஒட்டப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. பலவெற்றிகர தாக்குதல்களைத் தொடுத்து வீரகாவியமான மாவீரர்களின் உருவப் படங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.

கரும்புலிகள் தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் ஆகிய சகல பகுதிகளிலும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலாவது கரும்புலியாகச் சென்று வீரகாவியம்படைத்த மில்லர் வீரச்சாவடைந்த யூலை 5ம் திகதியை விடுதலைப் புலிகள் கரும்புலிகள் நாளாகப் பிரகடனப் படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. 162-ரி

## மந்திகை வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறை

(நெல்லியடி)

மந்திகை அரசினர் மருத்துவ மனையில் வெளிநோயாளர் பிரிவில் டாக்டர்கள் பற்றாக்குறையினால் சிகிச்சைக்குத் தினமும் வரும் சுமார் 600க்கு மேற்பட்ட வெளிநோயாளர்கள் பல மணி நேரம் காத்திருந்து சிகிச்சைபெறும் அவல நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இரத்தப்பரிசோதனைக்கு வருவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 160 ரி

# எவ்வித எதிர்ப்புக் கிளம்பினாலும் இஸ்ரேலுடனான உறவில் மாற்றமில்லை

(கொழும்பு)

"எந்தவித எதிர்ப்புகள் கிளம்பினாலும் இலங்கை இஸ்ரேலுடனான உறவுகளை மீண்டும் புதுப்பித்தே தீரும்" என வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்- இஸ்ரேலுடனான உறவுகளை இலங்கை மீண்டும் புதுப்பித்துக்கொள்வது பற்றிய கலந்துரையாடல் தற்போது அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்று வருகின்றது. அமைச்சரவையின் முடிவு ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி உத்தியோக பூர்வமாக அறிவிப்பார் என்று கூறினார்

இதே நேரத்தில் இலங்கை அமைச்சர் கதிர்காமர்க்கு இராணுவ உதவிகள் வழங்குவதாகில் இலங்கையில் இஸ்ரேல் தூதரகம் திறப்பதற்கு இலங்கை அரசு அனுமதியளிக்கவேண்டும் என்று இஸ்ரேல் நிபந்தனை விதித்துள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசு இஸ்ரேலுடன் மீண்டும் உறவுகளை ஏற்படுத்தினால் அடுத்த நிமிடமே அரசாங்கத்திலிருந்து விலகி விடுவேன்'' என்று முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ஏ. எச். எம் அஸ்ரப் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்களக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பயன்படுத்தப்பட இருக்கின்றனர். இவர்களுக்கு துப்பாக்கிகளும் வெடி மருந்துகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

மெதிரிகிரியாவுக்கு அருகில் உள்ள கிராமங்களை இவர்கள் பாதுகாக்கும் கடமையில் ஈடுபடுவர் எனினும், மகாவலி கிராமங்களை பாதுகாப்பதற்கும் இவர்கள் பயன் படுத்தப்பட இருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.